# முஸ்லிம்களால் 86 பேர் பணயமாக்கப்பட்டுள்ளனர்

(திருமலை)

கிண்ணியா நெல் சந்தைப் படுத்தும் சபைக்குச் சொந்தமான கட்டடத்திலுள்ள அகதி முகாமில் 86 தமிழர்கள் முஸ்லிம் ஊர் காவல் படையினரால் பணயக் கைதியாகவைக் கப்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இராணுவத்தின் உதவியுடன் இந்த அகதிகள் பணயமாக வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமில் பெண்களே கூடுதலாக இருக்கிறார்கள். இவர்கள் தப்பியோடமுடியாதவாறு பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்; 32 | தை 1 | ஜ: ஆகிர் பிறை 27 | இதழ்: 264

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 14-1-1991


## புலிகளின் தாக்குதலினால்
## கம்பிவேலி போட முயன்ற இராணுவம் பின்வாங்கியது

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுமுகாலிருந்து நேற்றுக் காலை 9மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் உப்பளப்பக்கமாக விடுதலைப்புலிளின் அரண்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணம் வந்து அப்பகுதியை சுற்றி முட் கம்பிவேலி போட முயன்ற போது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட எதிர் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் இராணுவத்தினர் தமது முயற்சிகளை கைவிட்டு முகாமுக்குள் திரும்பினர்.

முகாமுக்குள் சென்றஇராணுவத்தினர் பொதுமக்களின் குடியிருப்பு பகுதிகளை நோக்கி அரைமணி நேரமாக பாரிய ஷெல் தாக்குதல்களை மேற் கொண்டதாக கூறப்படுகிறது.

(வி)

# புலிகளை 6 மாதத்திற்குள் இராணுவம் தீர்த்துக்கட்டுமாம்

## தளபதி ஹமில்டன் வனசிங்கா அறிவிப்பு

(கொழும்பு)

புலிகளையும் அதன் தலைமையையும் அடுத்த ஆறுமாத காலத்திற்குள் இலங்கை இராணுவம் தீர்த்துக்கட்டிவிடும் என்று சிறிலங்கா இராணுவ தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளை அழிப்பதற்குத் தேவையான போதிய வெடி மருந்துகள், ஆயுதங்களுடன் இராணுவம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வளைகுடாப் போரினால் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டாலும் புலிகளுக்கு எதிராக போராடி இராணுவம் வெற்றியடைந்தே தீரும் என்றும் ஹமில்டன் வனசிங்கா மேலும் தெரிவித்தார்.

## குண்டு வீசசில் இறந்தோர் காயமடைந்தோர் விபரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம்இடம்பெற்ற பொம்மர் குண்டுவீச்சில் இறந்தவர்களில் ஒன்பது பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு; வை: முத்து ஆனந்தரட்ணம் (வயது 40) உடுப்பிட்டி, வி. ஜெயந்தினி (வயது 20) பாவற்குளம் வவுனியா. கு. லோகேஸ்வரன் (வயது 24), எஸ், சிவானந்தன் (வயது 60) கரவெட்டி. எஸ். தியாகராசா குமுளமுனை முல்லைத்தீவு, சு. ஜெயச்சந்திரன் (32 வயது) நெடுங்கேணி, இரட்ணவேல் கிளிநொச்சி, சுதாசினி [5 வயது) புளியம்பொக்கணை.

காயமடைந்தவர்கள் விபரம்:

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில்
## கொழும்பு செல்வதற்கு 500பேருக்கு அனுமதிமறுப்பு

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்ற 500க்கும் அதிகமான பிரயாணிகளுக்கு கொழும்பு செல்வதற்கு நேற்றுவரையும் அனுமதி வழங்கப்படவில்லை.

இவர்கள் இராணுவ அனுமதி பெறுவதற்கு வவுனியாவில் காத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

12 மினிபஸ்களில் இந்த பிரயாணிகள் நேற்று முன்தினம் பூநகரி ஊடாக வவுனியா சென்றனர்.

இதேவேளை கொழும்பிலி

(4-ம் பக்கம் பார்க்க)

## சுக்ளா விஜயம் திட்டமிட்டபடி நடைபெறும்

(புதுடில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்லாவின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பறிபோனாலும் அவர் திட்டமிட்டபடி இலங்கை விஜயத்தைமேற்கொள்ளுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 29ம் திகதி இலங்கை வரும் திரு சுக்ளா இரு நாட்கள் இங்குதங்கியிருப்பார்.

(எஸ்)

## மன்னாரில் பொம்மர் தாக்குதல்

(பூநகரி)

மன்னார்மாவட்டம்வண்ணான் குளம், அடம்பன் பகுதிகளில் நேற்று முன்தினம் இரண்டு பொம்மர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் அடம்பன் பகுதியில் ஒரு வீடும், வண்ணான்குளம்பகுதியில் அரிசி ஆலை, உழவு இயந்திரம் என்பன சேதமடைந்ததுடன், ஆலை வவவில்நின்ற 10கறவை

(4-ம் பக்கம் பார்க்க)

## தடுத்துவைக்கப்பட்ட
## 250 லொறிகளும் யாழ். செல்ல அனுமதி?

(பூநகரி)

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வடபகுதி நோக்கிவரும் வழியில் இராணுவத்தினரால் வவுனியாவில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 250 லொறிகளும் இன்று யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடபகுதியிலிருந்து கொழும்பு செல்லும்

[4-ம் பக்கம் பார்க்க]

## அக்கரைப்பற்று முகாமில்
## தடுத்து வைக்கப்பட்டோரில் நால்வர் பலி; 40 பேர் காயம்
### செஞ்சிலுவை குழு பார்வையிட்டது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 44 தமிழ் இளைஞர்களில் நால்வர் அடித்துக் கொல்லப்பட்டதுடன் ஏனைய 40 இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர்

இந்த இளைஞர்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க குழுவொன்று நேற்றுமுன்தினம் பார்வையிட்டது.

இந்த இளைஞர்களைச் சந்திப்பதற்கு சர்வதேச செஞ்

(4-ம் பக்கம் பார்க்க)


பொங்கல் வாழ்த்துக்கள்!

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் 'ஈழநாடு' தனது பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

நிர்வாகி


## யாழ். நகரில் முத்தமிழ் விழா மார்ச்சில் நடைபெறும்!
### கலாசாரப் பிரிவு ஏற்பாடு

(நல்லூர்)

''விடுதலைப் புலிகள் கலாசாரப் பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் மார்ச் முதலாம் வாரம்தொடக்கம் 10 நாட்களுக்கு தொடர்ந்து முத்தமிழ் விழா நடத்தப்படும் என்று கலாசாரப் பிரிவு பொறுப்பாவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கலாசாரப் பிரிவினால் நல்லூரில் நடத்தப்பட்ட கலந்துரையா

(4-ம் பக்கம் பார்க்க)

### 'ஈழநாடு' நாளை வெளிவராது

ஈழநாடு ஊழியர்களுக்கு இன்று விடுமுறையாதலால் நாளை (15-1-91) செவ்வாய்க்கிழமை மட்டும் ஈழநாடு வெளிவரமாட்டாது.

ஈழநாடுவழமைபோல் நாளை மறுதினம் தொடர்ந்துவெளிவரும்.

நிர்வாகி

## விசேட அறிவித்தல்

நல்லைக்கந்தசுவாமி கோயிலுக்கு செங்குந்த மரபு மக்களால் வழங்கி வரும் கொடிச்சீலை சட்டநாதர் வீதியில் எழுந்தருளியுள்ள வேல்முருகன் ஆலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்படுவதே உண்மையான தகவல் சென்ற வருடம் சட்டநாதர் ஆலயத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டது என்பது உண்மைக்கு மாறான செய்தி என்பதை சட்டநாதர் பரிபாலன சபையினருக்கும் சகல அடியார்களுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
க. குருநாதன்
பத்திரிகை விற்பனையாளர்
சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம்.

(எ-987)


# PHYSICS

92 BATCH | LIGHT

ஆரம்பம்:
19-01-91 சனிக்கிழமை 6-30 A.M.

வகுப்புகள்:
SAT / SUN 6-30 A. M.

ஆசிரியர்:
MR. RAVINDRANATHAN
(B. Sc Dip. in Ed.)

## 'A' Level Centre

POINT PEDRO ROAD, 1-st LANE,
JAFFNA.

(ஏ 986)


## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் க. அர்ச்சுனு

கனகரட்ணம் வனஜா (பவா) தம்பதிகளின் செல்வப் புதல்வன் அர்ச்சுனு தனது முதலாவது பிறந்தநாளை நாளை (15-1-91) 45, நாவலடி லேன் வண்ணார் பண்ணை மேற்கில் அமைந்துள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, சகோதரர்கள், கொழும்பு அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், மாமன்மார்கள் மற்றும் சவூதி அரேபியாவிலுள்ள சித்தப்பாமார்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

45, நாவலடி லேன்,
வண். வட மேற்கு.

(சி-4259)

## ஶரி விளம்பரம்

### கல்வி

ஆண்டு 6 தேசியப் பாடசாலைக்கான போட்டிப்பரீட்சைக்கு கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் விசேடமாகத் தேறுவதற்கு கற்பிக்கமுடியும். அனுபவமுள்ள ஆசிரியர், 85 சிவன் கோவிலடி, திருநெல்வேலி.

[சி-4255]

O/L எப்ரல், டிசெம்பர் பரீட்சைகளில் விசேட சித்தி, அதிவிசேடசித்தி பெறுவதற்கு பரீட்சை தாள்கள் சென்ற 15 வருடங்களாகத் திருத்திய பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி-4256)

### நாடக நூல்கள்

O/L தமிழ் பாடத் திட்டத்தில் நாடகமும் உள்ளது. அதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய இரண்டு நாடக நூல்கள். இராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய செட்டிக்காரர்கள் 25/-. முதலாய் பிள்ளை 30/-ம் 19 வானொலி நாடகங்கள். நாடகங்கலி பற்றிய விளக்கங்களும் விமர்சனங்களும் கொண்டவை.

(சி-4238)

## இடமாற்றம்

[பளை]

முல்லைத்தீவு ஒலுமடு கிராம சேவை அலுவலராக கடமையாற்றிய திருமதி சந்திராதேவி சுந்தரலிங்கம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண வட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில்

## 3ம் கட்டத்திற்கு அரிசி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் யாவருக்குமான விசேட இலவச உலர் உணவு 3ம் கட்ட உணவு விநியோகம் ப. நோ. கூ. சங்கங்கள்மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேட இலவச 3ம் கட்டத்திற்கு கிளிநொச்சியில் அரிசி வழங்கப்படுகிறது. (153)

## பொதுக்கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் வருகிற 16-ம் திகதி மாலை 3 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. கே. பேரம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (101)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## இன்றைய இராசி பலன்

14-01-1991
திங்கட்கிழமை

சதுர்த்தி வைகறை 6. 09 வரை; மூலம் பி. ப 5.57 வரை; சித்தயோகம் கரிநாள், இராகு காலம் காலை 8.00 9.34 வரை, சுபநேரம் பகல் 12-34 முதல் 2.04வரை போதாயன அமாவாசைராயாணபுண்ணிய காலம் காலை 5.27 முதல் 11. 51 வரை.

மேஷம்:- தொழில் குறைவு ஆடம்பரசெலவு, பயணங்களால் தொல்லை, குடும்ப அமைதி குன்றல், பொதுச் சேவை.

இடபம்:- குடும்பபிரச்சனை, வரவுக்கு மீறிய செலவு, தொழில் போட்டி வாக்குவாதம், வயிற்றில் ரோகம்.

மிதுனம்:- அந்நிய உதவி, மனமகிழ்ச்சி, தெய்வீகசெலவு தொழில் லாபம் இனசனவரவு புகழ்.

கடகம்:- நண்பருதவி தொழில் மாற்றம், புதிய உறவு, பணியாள் சகாயம், குடும்பத்தில் சுபகாரியம்.

சிங்கம்:- பதட்டம் மிகுதி, குடும்பத்தில் முரண்பாடு, புத்திரர் துன்பம், நரம்புப் பெலவீனம்.

கன்னி:- குறைகேட்டல், குடும்பக்கவலை, தொழில் கஸ்டம், வாக்குகலகம், குடும்ப அமைதி, ஆலயதரிசனம்.

துலாம்:- குடும்ப சந்தோஷம், மனைவியால் புகழ், தொழில் சிறப்பு, வாக்குவன்மை, விருந்துபசாரம்.

விருச்சிகம்:- சகோதரர் செலவு. காரிய பலிதம் அநாவசிய தலையீடு, தொழில் நஷ்டம், ஏமாற்றம்.

தனுசு:- பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, தூரத்து உறவு. வேண்டியவை கிட்டல், வஸ்திரலாபம்.

மகரம்:- புதிய சிந்தனை, தொழில் மாற்றம், குடும்ப பிரிவு. அந்நிய வாசம், தொந்தரவு.

கும்பம்:- குடும்ப சிறப்பு, காரிய வெற்றி, சொத்து மாற்றம், பயணங்களால் அனுகூலம், பாராட்டு.

மீனம்:- ஏக்கப் பெருமூச்சு குடும்ப நன்மை, நண்பர்கள் உதவி, மாமியார் கெடுபிடி பணவரவு.

'ஜோஸ்யர்'

## உளவளத்துணை நிலையம்

"சாந்திகம்"

உளநலன் கருதி ....... பயிற்சிக் களம்

ஒவ்வொரு சூழலும் மனித வாழ்வில் ஒவ்வொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எமமக்களின் உடல் உள நலன்களை நாம் வளர்க்க வேண்டும்.

எமது நிலையம் எம்மக்களின் உளநலனில் அக்கறை கொண்டுள்ளது.

ஆனல், பாரிய பரந்த இப்பணியில் ஈடுபட ஆள் பலம் தேவை: பயிற்சியும் தேவை.

தகுந்த முறையான பயிற்சியை நாம் அளிப்போம். எம் மக்களின் உளநலனில் ஈடுபாடு கொண்டோர் பயிற்சி பெற எம்முடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவம் பெற்று, விண்ணப்பிக்கவும். நேர்முகப் பேட்டியின் பின்னர் பயிற்சிகள் ஆரம்பமாகும். காலத்தின் அவசியங் கருதி காலதாமதம் செய்யாதீர்.

இப்பயிற்சியில் பங்குகொள்ள ஆங்கில அறிவு அவசியம். தரங்குறையாமல் தமிழில் பயிற்சி அளிக்க எமக்குக் காலந்தேவை.


நேரத்துடன் விண்ணப்பப்படிவம் பெற்றோர் தயவு செய்து படிவம் நிறைத்து அனுப்பவும்

மிகுதி நேரில்

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
உளவளத்துணை நிலையம்
சாந்திகம்
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 4258)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:
17-12-1913

மறைவு
16-12-1990

### பொன்னுச்சாமி பாலசுந்தரம்

(புட்டணி பிள்ளையார் கோவில் மணியம் அப்பா)

எமது அன்புத் தந்தையின் மறைவு கேள்வியுற்று அவருடைய மரணச்சடங்குகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நாளை (15-1-1991) செவ்வாய்க்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரிகைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரி,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை.

(சி-4260)


அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

## இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!




சலவைப் பவுடர் வெற்றுப் பக்கெற் 25 சேர்ப்பித்து ஒரு அப்பியாசக் கொப்பி அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(A 976)

## உழவர் திருநாள் தமிழர் பெருநாள்!

உழவர் திருநாள் உலகத் தமிழர் பெருநாள் என்று தமிழ் கூறும் நல் உலக மெல்லாம் இன்று பொங்கல் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது!

இந்துமதத் திருவிழாவாக தொன்று தொட்டு தமிழகத்திலும், ஈழத்திலும் கொண்டாடப் பட்டுவரும் இவ்விழா உழவர் விழாவாக விரிந்து பரந்து இன்று தமிழர் விழாவாக எங்கும் பரிணமித்துள்ளது

நாட்டில் அமைதி நிலவி நிலம் செழித்து' வளம் கொழித்து மக்கள் மனம் பொங்கிப் பூரித்து மகிழ்ந்து வாழும் காலத்தில் பொங்கல் விழா எல்லோர் மனைகளிலும் மங்கல விழாவாகத் திகழும்!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாரதியும், ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வார்'' என்று வள்ளுவரும் அன்று தீர்க்கதரிசனத்துடன் பாடிய பாடல்கள் இன்று எவ்வளவு நிதர்சனமாகி வருவதை காண்கின்றோம்!

உலகின் எக்கோடியில் நாம் வாழ்ந்தாலும் மாய்ந்து மடிந்தாலும் அங்கெல்லாம் தொழுதுண்டு பின்சென்றுவாழ் வோம்! எம் நாட்டில் உழுதுண்டு மட்டும் வாழவே மாட்டோம் என்ற உரம்கொண்ட நெஞ்சுடன் உல்லாச பவனிவரும் எம் இனத்து இரத்தங்களுக்கு இன்று பொங்கல் ஏது? பொங்கும் தமிழ் உணர்வேது?

எமது மண்ணில் இடம் பெறும் சகிக்கமுடியாத இன்னல்களின் மத்தியிலும் அவலமும் ஆத்திரமும் பொங்கிய மனநிலையிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கோ. பொங்கல் தினத்தில் அத்தியாவசியமாகத் தேவைப்படும் அரிசி, தேங்காய். பயறு. சர்க்கரை ஆகிய அத்தனைக்கும் நிலவும் தட்டுப்பாட்டுக்கும், அதர்ம விலைகளுக்கும் எவர்மீது பழிபோடுவது என்ற ஏக்கம் தான் இன்று மிஞ்சியுள்ளது.

வெடி கொளுத்தி, வேடிக்கை காட்டி 'உள்ளம் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க பள்ளி மாணவர் துள்ளித்திரிய வேண்டிய இன்றைய பொங்கல் தினத்தில் ''பொம்மர் தாக்குதல்'. நிறுத்தம் மட்டும் செய்து அரசு வேறு எமக்கு வேடிக்கை காட்டுகிறது.

நாம் எதிர்பார்க்கும் அமைதியும், செழிப்பான காலச் சூழ்நிலையும் எம் மத்தியில் இன்று நிலவாதபோதிலும் வெண்நுரை பொங்கித் தள்ளி நிறைகுடமாகக் காட்சி தரும் பொங்கல் பானை போல மன நிறைவை எம் மனத்தில் இருத்திவாழ நாம் இன்று உறுதி பூண்டிடுவோம்!

— மயூரன்

## பொங்கலோ பொங்கலென ஆர்ப்பரிக்க

# தமிழர் வாழ்வு மலர்ந்திட பொங்கிடுவோம்!

தனதானிய வளம் பொங்குவதற்கு ஆண்டவனுக்கு நன்றி கூறுவதனை பெருவிழா பொங்கல் பண்டிகை. சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் சங்கராந்தியன்றே பொங்கல் பண்டிகையை நாம் கொண்டாடுகின்றோம், நமது நாட்டில் நடைபெறும் பொங்கல் விழாவுக்கும், உலக நாடுகளில் நடைபெறும் அறுவடை விழாவுக்கும் ஒரு மாறுபாடு இருக்கிறது.

உலக நாடுகளில் நடைபெறும் அறுவடை விழாக்களின் தானியத்துக்கும் தானியங்களைத் தாங்கும் நிலத்துக்கும் தான் விழா எடுக்கிறார்கள். நமது நாட்டில் தானியத்தை அஷ்டலட்சுமிகளில் ஒன்றாகிய தானியலட்சுமி என்றே கருதுகின்றோம். நிலத்தைப் பூமிதேவி என்றுசொல்லித் திருமாலின் முக்கியமான இருசக்திகளில் ஒன்றாகப் போற்றுகின்றோம். சூரியனின் சங்கிரமணம் காரணமாக தானியலட்சுமி பூமிதேவி இருவரையும்விட அந்தச் சூரியனே பொங்கல் திருநாளில் முக்கியஸ்தனாகிவிடுகிறான்,

மறைந்து நின்றே அருளும் ஆண்டவன், சூரியவெளிச்சம், மழை இவற்றால் பயிர்பச்சைகளுக்கு உயிர் ஊட்டி வளர்க்கிறான். ஆண்டவனின் உழவுக் கடவுளாகிய சூரியவெளிச்சம், மழை இவற்றோடு படைத்து மனிதன் உழவுக்குப் பயன்படுத்திக்கொண்ட மாடுகளிடமும் நம் தமிழ்மக்கள் நன்றி கொண்டிருக்கிறார்கள். எனவேதான் மழைத்தெய்வமாகிய இந்திரனை வழிபட போகிப் பண்டிகையையும், சூரியனை வழிபடப் பொங்கல் பண்டிகையையும் மாடுகளைப் போற்ற மாட்டுப் பொங்கலும் கொண்டாடி வருகின்றோம்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்... எமது பிரதேசம் செந்நெல் விளையும் வளநாடு. மாற்றான் கையை நம்பி நாம் வாழவில்லை; எமது மண்ணை வளம்படுத்தி விவசாய நிலமாக மாற்றி எமது மண்ணை மக்களைப் பட்டினியில் இருந்து மீட்க அனைவரும் உணவுற்பத்தியில் ஈடுபடும் காலம் வந்துவிட்டது!

அனைவரும் பொங்கலோ பொங்கல் என தமிழர் மனம் மலர்ந்திட நமது மண்ணில் விதைத்திட்ட நெல்லைப் பொங்கிடுவோம்.

- ஸச்சி -

### ''தைத்திங்கள் உதிக்கட்டும்''

தைத்திங்கள் நன்றாய் உதிக்கட்டும்
தமிழர் வாழ்வு மலரட்டும்
வித்தகர் பலர் இங்கு தோன்றட்டும்
வீணர்கள் வாழ்வு அழியட்டும்
முத்தமிழ்க் கலைகள் நன்கு வளரட்டும்
முடிவு நன்றாய் அமையட்டும்
புத்தொளி ஒன்று வீசட்டும்
புதியன நாட்டில் பிறக்கட்டும்

பஞ்சம் பிணிகள் இங்கு விலகட்டும்
பாரிலின்பம் ஓங்கட்டும்
அஞ்சும் நிலைமை இங்கு விலகட்டும்
அடிமை வாழ்வு நீங்கட்டும்
கொஞ்சும் நிலைமை ஒழியட்டும்
கேவல வாழ்க்கை விலகட்டும்
நெஞ்சில் அமைதி பிறக்கட்டும்
நிம்மதி என்றும் நிலைக்கட்டும்

- சி. சபாநாதன்
சங்கரத்தை

## ''யுத்தத்தால் ஏற்படும் விளைவுகளுக்குஸ்ரீலங்கா அரசே பொறுப்பேற்கவேண்டும்''

### விடுதலைப் புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதற்காக நாம் போராடி வருகிறோம். ஆனால் எமது நேர்மையான நோக்கத்தையும், தூய்மையான அரசியல இலட்சியத்தையும் தவறாக மதிப்பிட்டு எம்மை அழித்துவரும் நோக்கத்துடன் சிங்கள அரசு யுத்தத்தைத் தொடர முடிவெடுத்துள்ளது. எனவே இந்த யுத்தத்தால் ஏற்படக்கூடிய சகலவிதமான விளைவுகளுக்கும் ஸ்ரீலங்கா அரசு தான் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

தமிழீழத்தில் சமாதானத்தையும், இயல்பு நிலையையும் உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்த காலவரையற்ற போர் நிறுத்தத்தையும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையையும் சிறீலங்கா அரசு நிராகரித்துள்ளது.

ஆயுதங்களை கீழேபோட்டு சரணாகதி அடையக்கோரும் அநீதியான நிபந்தனைகளை முன்வைத்து யுத்தத்தை தொடர்வதற்கு சிங்கள அரசு முடிவுசெய்திருக்கிறது. சமாதான வழிமூலம் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் சிறீலங்கா அரசுக்கு எவ்விதமான அக்கறையும் இல்லையென்பதை இந்த முடிவானது உலக சமுதாயத்திற்கு தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது.

இனவாத அரசியலிலிருந்தும் இராணுவ அடக்குமுறைப் பாதையிலிருந்தும் சிங்கள ஆளும் வர்க்கம் ஒருபொழுதும் விட்டுவிலகப்போவதில்லை என்பதையும் இந்தமுடிவு உலகிற்கு நன்கு உணர்த்தியிருக்கிறது.

#### போர்என்ற போர்வையில்

போர்என்ற போர்வையில் சிறீலங்கா அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக என்றுமில்லாதவாறு ஒருகொடூரமான இனப் படுகொலையை நடத்திவந்தது. ஏழு மாதங்கள் வரை நடைபெற்ற இந்த யுத்தத்தில் ஆறுயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரம் பேர் காயமடைந்தனர். பத்து லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாயினர்.

தென்தமிழீழம் ரணகளமாக்கப்பட்டது; அங்குள்ள பாரம்பரிய தமிழ்க் கிராமங்களிலிருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். போர் ஆரம்பமாகிய காலத்திலிருந்து தமிழீழத்தில் ஒரு திட்டமிட்ட பொருளாதாரத் தடையை அரசு திணித்தது, இதனால் உணவுவகை, மருந்து வகை, போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் தாங்கொணாத் துன்பத்திற்கு ஆளாகினர்.

#### போர்நிறுத்த பிரகடனம்

யுத்தம் என்ற போர்வையில் தொடர்ந்துவந்த இந்த இனப் படுகொலையை தடுத்துநிறுத்தி எமது மக்களின் பரிதாப நிலையை உலகிற்கு எடுத்துக் காட்டி, அவர்களுக்கு நிம்மதியையும் நிவாரணத்தையும் பெற்றுக்கொடுக்கும் நோக்கமாக நாம் இப்புத்தாண்டிலிருந்து ஒருதலைப்பட்சமான காலவரையற்ற போர் நிறுத்தத்தை பிரகடனம் செய்தோம். தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் உண்டுபண்ணும் நல்லெண்ண நோக்கில் இந்தப் போர் நிறுத்தம் எம்மால் பிரகடனப்படுத்தப்பட்டது, இலங்கை அரசும் போர் நிறுத்தத்திற்கு இணங்கினால் சமாதானப் பேச்சுகளில் பங்குபற்றவும் நாம் இணங்கினோம். எமது முடிவை சர்வதேசஉலகம் வரவேற்றது. ஆனால் எமதுபோர்நிறுத்த அறிவித்தல் அரசாங்கத்திற்கு அதிர்ச்சியையும், குழப்பத்தையும் உண்டுபண்ணியது நாம் போர்நிறுத்தம் அறிவித்த திகதியிலிருந்து ஆறுநாட்கள் வரை எவ்வித முடிவும் எடுக்க முடியாது அரசு தடுமாறியது அதேசமயம், அரசாங்கம் முடிவு எடுக்கும்வரை காத்திராது மூன்று நாட்களுக்கு தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவதாக சிறீலங்கா இராணுவத் தலைமைப்பீடம் ஒரு அறிவித்தலை விடுத்தது. இதன்பின்னர், அதாவது ஆறு நாட்கள்வரை இழுபட்ட பின் போர்நிறுத்தம் என்ற வார்த்தைப்பிரயோகத்தை தவிர்த்து ஏழு நாட்கள்வரை காலவரம்பிட்டு தாக்குதல் இடை நிறுத்தம் ஒன்றை அரசு அறிவித்தது. அதுவும் ஒருதலைப் பட்சமாக கடும் நிபந்தனைகளையும் விதித்துக்கொண்டது. அந்த அறிவித்தலில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை என்றும் இனப் படுகொலையில் ஈடுபடவில்லை என்றும் அரசாங்கம் மறுத்துள்ளது. இதற்கு ஆதாரமாக பல தமிழ்க் குழுக்கள் அரசுக்கு ஆதாரவாக நிற்பதை சுட்டிக்காட்டியது: இந்த விதண்டாவாதத்தை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

அரசாங்கத்தின் அடிவருடிகளாக நிற்கும் இந்த தமிழ்க் குழுக்கள் யார், இவர்களின் அரசியல் பின்னணி என்ன, இவர்கள் செய்துவரும் இனத் துரோகம் எப்படிப்பட்டது என்பதை எமது மக்களும் உலகும் நன்கறியும். இந்தக் குழுக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்.

முன்பு இந்திய அரசுக்கு கூலிப் படைகளாக இயங்கி, இப்பொழுது சிங்கள இராணுவத்தின் உதவிப்படைகளாக செயல்படுவர்கள். இராணுவத்துடன் சேர்ந்து தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கு துணைபோபவர்களும் இந்த தமிழ்த் துரோகக் கும்பல்களின் ஆதரவைப் பெற்றால் போல இனப்படுகொலையை மூடிமறைக்கலாம் என அரசு எண்ணுவது உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்கு ஒப்பாகும். சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் உலக சாதனையை எட்டியிருக்கிறது என்பதை சர்வதேச சமூகம் நன்கறியும். தமிழ் மக்கள் இனரீதியாக அழிக்கப் படுவது ஒருபுறமிருக்க 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களை இந்த அரசு கொன்றுகுவித்திருக்கிறது என்ற குற்றச் சாட்டை சிங்கள மனித உரிமை நிறுவனங்களே முன்வைத்துள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

### வழி பிறக்கும்

தை பிறந்தால் வழிபிறக்கும் தமிழர்கட்கு
தப்பாகக் கூறிவிட்டார் முன்னவர்கள்
கைநிறைய காசுபணம் உழைத்திடலாம்
கவலையில்லை என்றவர்கள் சொல்லிவிட்டார்
பொய்யுமில்லை புளுகுமில்லை பெரியோர் சொன்ன
பெருவார்த்தை பலித்ததையா எம்மவர்க்கு
மெய்யுடப்பு படையினரி னியக்குண்டால்
மேனியெல்லாம் வழிபிறக்கச் செய்யுதப்பா
கைதவழும் சேய்கள்முதல் தமிழ்க் கன்னியீறாய்
காலனவன் குண்டுபட்டு மடிகின்றார்கள்
தைபிறக்க வழியுமிங்கே பிறக்குதையா
தயக்கமின்றிப் பரலோகம் போவதற்கு...

- ஆவூர்க்குமரன்

### புதிய அதிபர்

(தென்மராட்சி)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபராக திரு. இ. கைலைநாதன் பதவியேற்றார்.

# யுத்தத்தால்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தைத் தொடரப் போவதாக சிறிலங்கா அரசு விடுத்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பும் நேர்மையான நோக்கத்துடன் போர் நிறுத்தப்பிரகடனத்தைச் செய்யவில்லை என தெரிவித்திருக்கிறது. போர் நிறுத்தத்தை நாம் தொடர்ச்சியாக மீறிவந்ததாகவும் குற்றம் சாட்டுகிறது. இது அபாண்டமான ஒரு பொய்க் குற்றச்சாட்டாகும். உண்மையில் சமாதானத்தை விரும்பும் நேர்மையான நோக்கம் சிறிலங்கா அரசிடம்தான் இருக்கவில்லை. சிங்கள இராணுவம் சண்டையை தொடர விரும்புகிறதுஎன்றும் இராணுவத்தின் விருப்புக்கு மாறாக அரசு ஒன்றும் செய்யமுடியாதென்றும் சமீபத்தில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன பத்திரிகையாளர் மாநாடுஒன்றில் கூறியிருக்கிறார், இந்தக்கூற்றிலிருந்து சமாதானத்தின் விரோதிகள்யார், சண்டையை விரும்புபவர்கள் யார் என்பது தெளிவாகிறது.

## ஆத்திரமூட்டும் நடவடிக்கை

விடுதலைப்புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை கண்டிப்பானமுறையில்கடைப்பிடித்து வந்திருக்கிறது. சிங்களஇராணுவத்தின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கும் மத்தியில் நாம் மிகவும் பொறுமையுடன் போர் நிறுத்தத்தை பேணிவந்திருக்கிறோம். நாமாகவே ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்துவிட்டு, போர் நிறுத்தத்தை எதற்காக நாம்மீறவேண்டும். எனவே, சிறிலங்கா அரசின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது. யுத்தத்தைத் தொடர்வதற்கு நியாயம் [illegible]தற்காகவே சிறிலங்கா அரசு எம்மீது வீண் பழியைச் சுமத்த முயல்கிறது. இதனை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும் என நாம் நம்புகிறோம்.

## நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை

இம்மாதம் 9-ந் திகதி நாம் வெளியிட்ட அறிக்கையில் பேச்சுவார்த்தைகளுக்கு எவ்வித முன்நிபந்தனைகளையும் நாம் ஏற்கப் போவதில்லை என்றும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளையே நாம் விரும்புவதாகவும் திட்டவட்டமாக தெரிவித்திருந்தோம். ஆனால் சிறிலங்கா பேச்சுவார்த்தைகளுக்கு கடுமையான ஏற்றுக்கொள்ள முடியாத பல முன்நிபந்தனைகளை விதித்திருக்கிறது. ஆயுதங்களை கைவிடவேண்டும் என்பது இதில் முக்கிய நிபந்தனையாக இருக்கிறது. எமது இயக்கம் கடந்த 17 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தை ஏன் நடத்திவருகிறது என்பதை கிறிதேனும் விளங்கிக் கொள்ளாமல் இந்த நிபந்தனை முன்வைக்கப்பட்டிருப்பது எமக்கு ஒருபுறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் கவலையையும் தருகிறது. இந்திய அரசும் இதுபோன்ற நிபந்தனையை விதித்ததால் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் ஒரு நீண்டயுத்தம் மூண்டது என்பதும், இறுதியில் எம்மிடம் ஆயுதங்களை களையமுடியாத நிலையில் இந்திய இராணுவம் வெளியேறியது என்பதும் சிறிலங்கா அரசிற்கு நன்கு தெரிந்த விடயம். இந்திய அரசு செய்த மாபெரும் வரலாற்றுத் தவறையே சிறிலங்கா அரசும் செய்யப் போகிறது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## அரசு அறிக்கை

சிறிலங்கா அரசு விடுத்துள்ள அறிக்கையில் இராணுவப் பிரிவு, அரசியற பிரிவு என்ற ரீதியில் எமது இயக்கத்தை பிளவு படுத்திக் காட்ட முனைகிறது. எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை இராணுவப் பிரிவுத் தலைவராக தவறாக மதிப்பிடுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது இராணுவ அரசியல் அமைப்புகள் ஒன்றிணைந்த ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்பதையும், அந்த விடுதலை இயக்கத்தின் தலைவராகவே பிரபாகரன் பதவி வகிக்கிறார் என்பதையும் சிறிலங்கா அரசு புரிந்து கொள்ளவில்லைப் போலும். அதோடு, எமது இயக்கத்தில் இராணுவம், அரசியல் என்ற வேறுபாடு இல்லை. பேச்சுவார்த்தைகளில் யார பங்குபற்றவேண்டும் என்பதைச் சிறிலங்கா அரசு தீர்மானிக்கமுடியாது. அது எமது இயக்கத் தலைமைப்பீடம் எடுக்கவேண்டிய முடிவு.

## பொய்க் குற்றச்சாட்டு

சிறிலங்கா அரசு வேறு பல அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை எம்மீது சுமத்தயிருக்கிறது. எமது இயக்கம் மீது களங்கத்தை ஏற்படுத்துவதோடு, சமாதானப் பேச்சுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்காகத திட்டமிட்டு இந்தக் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தத்தில் சிறிலங்கா அரசின் அறிக்கையை நன்கு பரிசீலனைசெய்து பார்க்கும் பொழுது, தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்து நடத்தும்நோக்கில் நியாயமற்ற, ஏற்றுக்கொள்ளமுடியாத முன்நிபந்தனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே சமாதானமான முறையில் தமிழீழ மக்களின் நீண்டகாலப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க அரசு விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. உள்நாட்டு நிர்ப்பந்தங்களையும், தென்னிலங்கையில் தலைவிரித்தாடும் சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளையும் திசை திருப்பும் நோக்கத்துடன் அரசாங்கம் இந்த யுத்தத்தைத் தொடர விரும்புகிறது, சிறிலங்கா அரசின் இந்த யுத்த மோகத்தினுல் பாதிக்கப்பட இருப்பது தமிழ் மக்களே. இந்த யுத்தம் தொடர்வதால ஏற்கனவே பாதிக்கப்பட்ட எமது மக்கள் மேலும் பெரிய துன்பத்தை சந்திகக நேரிடும். எனவே, இலங்கைத் தீவில் சமாதானத்தையும், பேச்சு மூலம் தீர்வையும் விரும்பும் உலக நாடுகள் சிறிலங்கா அரசின் இராணுவ அடக்குமுறைக் கொவகையைக் கண்டிக்க முன்வரவேண்டும். சிறிலங்கா அரசுக்கு உதவிகளை நிறுத்தி சமாதானப் பாதையைக் கடைபிடிக்க வற்புறுத்த வேண்டும்,

சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் சகிக்க முடியாத அளவிற்கு மீறப்பட்டு வருவதை நன்கு தெரிந்தும் மேற்கத்திய நாடுகள் தொடர்ந்தும் கடனுதவி வழங்கிவருகின்றன. சீனு போன்ற நாடுகள் ஆயுதங்களை குவித்துவருகின்றன இந்த உதவிகள் கிடைப்பதால் துணிவுகொண்ட சிறிலங்கா அரசு தொடர்ந்து மனித உரிமைகளைமீறி, மனித நீதிக்கு விரோதமாகச் செயற்படுகிறது. எனவே சிறிலங்கா மீது பொருளாதார அழுத்தங்களை போடவேண்டியது நாகரீக உலகத்தின் கடமையாகும். (வி)

---

## மரண அறிவித்தல்

### வேலு சீனிவாசகம்

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த வேலு சீனிவாசகம் காலமானார். அன்னார் பூரணத்தின் கணவரும், மார்க்கண்டு (கனடா), சிவசோதி, கமலாதேவி ஆகியோரின் தந்தையும், செல்வம், சரஸ்வதி, செல்லம்மா ஆகியோரின் மாமனாரும், அருண், பாபு, வரதன், பாமினி, யாழினி, அகிலன், அகிலா, கவிதா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியை சிவன் வீதி, 'கமலகத்திலிருந்து 15-1-91 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்; சீ. சிவசோதி (மணி)
சிவன் வீதி, உரும்பராய் கிழக்கு.

(கி 4261)

---

## துணிகர கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ், நகரில் நேற்றுமுன்தினம் இரவு துணிகர திருட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி பகுதியில் உள்ள பஸ்தியான் சந்தியில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றின் பூட்டுகளை வாளால் அரிந்து, பின்பு அக் கடையில் உள்ள பல ஆயிரம் ரூபா பெறுமதியான சாமான்களை மாட்டுவண்டியில் ஏற்றிச் சென்றுள்ளனராம்.

மேற்படி சம்பவம் பற்றி தற்போது விடுதலைப்புலிகள் விசாரணை செய்து வருகின்றனராம். (வி)

---

## கொழும்பு

(1ம பக்க தொடர்ச்சி]

ருந்து வந்த பிரயாணிகள் இரு நாட்களாக வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் நேற்றுயாழ். செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் ஆயிரக்கணக்கான பிரயாணிகள் நேற்று யாழ். வந்துசேர்ந்னர்.

இதேவேளை நேற்றுக் கொழும்பிலிருந்து வந்த பலர் யாழ். வருவதற்காக வவுனியாவில் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (23)

---

## தடுத்துவைக்கப்பட்ட

(1ம பக்கத் தொடர்ச்சி)

போது வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்ட நூறு லொறிகளும் இன்று கொழும்பு செல்ல அனுமதிக்கப்படும் என்று அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(23)

---

## யாழ் நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டல் ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: மூன்று வருடங்களாக வெற்றித திசை நோக்கிச் செல்கிறோம். பக்கவிளைவுகள், அமைதியின்மை காரணமாக கலைகள் ஸ்தம்பித்துப் போயின. போராட்டம் நீளமானது வெற்றிகிடைக்கும்வரை ஓயப் போவதில்லை. அதனுல் மக்களுக்கு மனதில் ஆறுதலளிக்க பாரம்பரிய கலைகள், நவீன வடிவங்களை கொண்ட பத்து நாள் முத்தமிழ் விழா நடத்தப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளை மக்கள் முன்னணி பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன், தேவர் ஆகியோர் முத்தமிழ்விழா பற்றிப்பேசினுர்கள், (152)

---

## செஞ்சிலுவைச் சங்கத்தால் நிவாரணப் பொருள் வழங்கப்படுகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் செஞ்சிலுவைச் சங்கத்தால் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது.

கொழும்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் கொண்டு வரப்படும் அரிசி, மா, பருப்பு, சீனி முதலான நிவாரண உதவிகளையே பொதுமக்களுக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிவருகிறன என செஞ்சிலுவைச் சங்க செயலாளர் திரு எஸ் சிவராசலிங்கம் தெரிவத்தார்.

நிவாரணப் பணிகளில் வண. பிதா. ஜெயநேசன், திரு. சிவராசலிங்கம், அபிவிருத்தி புனர் வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஐ. நடராசா, பொன். நித்தியானந்தன் மற்றும் திரு. பேரின்பராசா முதலானோர் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும், (83)

---

## இரு இளைஞர் கைது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு படுவான்கரை கோயில்போரதீவைச் சேர்ந்த இரு இளைஞர்கள், சிறிலங்கா இராணுவததால் கைதுசெய்யப்பட்டு மோசமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டனர்.

நல்லதம்பி சந்திரகுமார் (27 வயது), முருகன சங்கரன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

நேற்று முன்தினம் பெரிய நீலாவணை செல்லும் வழியிலேயே இந்த இளைஞாகள் கைதுசெய்யப்பட்டனர். (வி)

---

## சிற்றூரவை செயலகம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணுவில் சிற்றூரவைத் செயலகம் இன்று மாலை 4-00 மணியளவில் தென்மராட்சி வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. செல்வராசாவினுல் திறந்து வைக்கப்படவுள்ளது.

கைதடி-நுணுவில் சிற்றூரவைத் தலைவா திரு.எஸ்.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தை யொட்டி யாழ்.கோட்டையில வீர மரணமடைந்த லெப். சுமன் ஞாபகார்த்த வீதி ஒன்று பிரதேசப் பொறுப்பாளர் திரு. சசியினுல் திறந்து வைக்கப்படும்.

---

## அக்கரைப்பற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலுவைச் சங்கக் குழு சென்றபோது பலத்த காயங்களுடன் நான்கு இளைஞரின் சடலங்கள் காணப்பட்டதாக மேற்படி குழுவினர் தெரிவித்தனர்.

ஏனைய 40 இளைஞர்களைச் சந்தித்தபோது, அவர்கள் மீது அதிரடிப் படையினர் நடத்திய மோசமான தாக்குதலினுல் படுகாயமடைந்த நிலையில காணப்பட்டனர்.

இந்த இளைஞர்களின் உடல் நிலை கவலையளிப்பதாக இருப்பதைச் சுட்டிக்காட்டிய மேற்படி குழுவினர் அவர்களுக்குச் சிகிச்சையளிக்க அனுமதிக்குமாறு கேட்கப்பட்டபோது படையினர் மறுத்துவிட்டனர்.

இத்தக்குழுவின சந்திப்பின் பின்னர் நாற்பது இளைஞர்களும் அம்பாறை இராணுவ முகாமுக்கு மாற்றப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

---

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

---

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கத்தின் சுதேசிய விற்பனை நிலையத் திறப்பு விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் இன்று காலை நடைபெறுகிறது.

இந்நிலையத்தில் குடும்பநல முதலுதவிப் பயிற்சி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

---

## பரிசூதிய சேமிப்பு திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தினுல் அறிமுகப்படுத்தப் படும் அமரர் திரு. ஞானப்பிரகாசம் ஞாபகார்த்த பரிசூதிய சேமிப்புத் திட்டம் தைப்பொங்கல் தினமான இன்று அதன் ஸ்ரான்லி வீதியிலுள்ள தலைமைச் செயலகத்தில் நண்பகல் 12-00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

---

## மன்னுரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாடுகளும் இறந்தன.

மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்ததினுல் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (23)

---

## குண்டுவீச்சில்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

வி. செல்வராசா (வயது28) முறிகண்டி, எஸ், தம்பிராசா (வயது 45) கிளிநொச்சி, தினேஸ் (வயது 05) கிளிநொச்சி, பத்மநாதன் (20வயது) புளியம்பொக்கணை, சசிக்குமார் (வயது 14) கிளிநொச்சி, மதி ஞானலிங்கம் சித்தன்கேணி, ஆனந்தரதினம் (வயது68) கிளிநொச்சி பிரபாகரன் (வயது23) நெடுங்கேணி, கணபதி (வயது 69) கண்டாவளை, எஸ். நாதன் (வயது20) கிளிநொச்சி, ராமச்சந்திரன் (வயது 30) கிளிநொச்சி, அன்ரன் அலோசியஸ் கிளிநொசசி, ஜெயக்குமார் (வயது30), திருச்செல்வம்(வயது26)கிளிநொச்சி.(வி)

---

## வரி விளம்பரம்

### காணவில்லை

ஏழாலை வடக்கிலுள்ள ஊரங்குனை என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இடம்பெயர்ந்து தற்போது ஏழாலை தெற்கில் மயிலங்காட்டில் வசித்து வந்த இராசையா தங்கம்மா என்பவர் 10-1-91 வியாழக்கிழமை மனநோய் காரணமாக வீட்டைவிட்டு வெளிக்கிட்டுவிட்டார். வயது 60 இருக்கும். இவரைப்பற்றிய தகவல் அறிந்தால் கீழ்வரும் விலாசத்துக்கு அறிவிக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். தகவல் தருபவர்; சு. சின்னத்துரை, ஓய்வு பெற்ற ஆசிரியர், விலாசம்; த. நாகராசா, மே/பா: சு. சின்னத்துரை, ஏழாலை தெற்கு மயிலங்காடு, சுன்னுகம்.

(கி 4262)